# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 11.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 389/D/2020**

திரு G. பிரபாகர் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
காயல்பட்டினம் நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 27.08.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 07.09.2019 & 12.09.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 16.10.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 05.11.2019 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 04.12.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 11.01.2020 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திரு. ரவிச்சந்திரன், மேலாளர், காயல்பட்டினம் நகராட்சி, தூத்துக்குடி மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றறார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், காயல்பட்டினம்

வடபாகம் கிராமத்தில் இயங்கிவரும் DCW நிர்வாகத்தால் எத்தனை ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டது என்ற விவரம், ஆழ்துளை கிணறு அமைக்க எந்த துறையினரால் அனுமதி வழங்கப்பட்டது என்ற விவரம், ஆழ்துளை கிணறு அமைப்பது தொடர்பான அலுவலக கோப்பின் சான்றொப்பமிட்ட நகல் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (11.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பாக, பொது அதிகார அமைப்பின் கட்டுப்பாட்டில் இல்லை என்றும், ஆழ்துளை கிணறு அமைப்பது தொடர்பாக அனுமதி பெறவில்லை என்றும் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. மனுதாரர், ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது தொடர்பாக, திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திற்கு 20.12.2018 தேதியிட்டு விண்ணப்பித்த மனுவிற்கு அவ்வலுவலகத்திலிருந்து ஓ.மு.அ1/9931/2018 நாள் 11.01.2019 அன்று, மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களான, DCW நிறுவனம் தனது நிறுவனத் தேவைக்காக அமைந்துள்ள 150 ஏக்கர் உப்பள நிலங்களுக்கு தேவையான உப்பு நீரை அளிக்கும் வகைக்கு 23 போர்வெல்களை 2004-2005-ஆம் ஆண்டு அமைத்து பின் மின்மோட்டார் மூலம் நீரை இறைத்து பயன்படுத்தி வருகிறது என்றும் இவற்றால் எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் மற்றும் ந.க.எண்.அ1/4193/2019 நாள் 06.08.2019 அன்று DCW நிறுவனம் அதற்கு சொந்தமான இடத்திலேயே ஆழ்துறை கிணறு அமைத்து உப்பளம் அமைத்துள்ளதாகவும், ஆழ்துளை கிணறு அமைந்துள்ள இடம் முழுவதும் மேற்படி நிறுவனத்திற்கு சொந்தமான உப்பளம் அமைந்துள்ள இடம் என்றும், மேற்படி ஆழ்துறை கிணறால் விவசாயம் அல்லது நிலத்தடி நீர் பாதிப்பு ஏதுமில்லை என்ற தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

6. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், அவரது மனுவில் கோரிய தகவல்களான ஆழ்துளை கிணறு அமைப்பது சம்பந்தமாக எத்தனை மீட்டர் தூரத்திற்கு நிலத்தடி நீர் ஆய்வு செய்யப்பட்டன என்ற அறிக்கையை அலுவலக கோப்பின் அடிப்படையில் சான்றொப்பமிட்ட நகலினை மனுதாரருக்கு வழங்க திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 389/D/2020</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

1. பொதுத் தகவல் அலுவலர் / மேலாளர்,
   காயல்பட்டினம் நகராட்சி,
   தூத்துக்குடி மாவட்டம்.

2. வருவாய் கோட்டாட்சியர் அலுவலர்,
   வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
   திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு G. பிரபாகர், த/பெ. கணேச நாடார்,
எண்.13, கீழநவ்வலடி விளை சந்து,
ஆறுமுகநேரி.

Copy to: File
SNPA 16.11.2020